வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 5814/ஆ1/2025 நாள். .11.2025

பொருள்:– பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – அரசு தொடக்க/நடுநிலை/உயர்/மேல்நிலைப் பள்ளிகள் – ஆசிரியர்கள் புதிய முயற்சிகளுக்கு அரசின் சார்பாக பாராட்டுச் சான்றிதழ் வழங்க – அரசின் ஆணை பெறப்பட்டது– உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – சார்பு

பார்வை:–
1. அரசாணை (நிலை) எண்.125, பள்ளிக்கல்வித்(பக 5(1)) துறை, நாள்.21.05.2025
2. சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.0028/ஐ/இ3/2025 நாள்.17.11.2025

........

பார்வை 1–இல் காணும் அரசாணையில் கற்றல் அனுபவத்தை புதுமையாக மாற்றியமைத்தலில் மேன்மை ஏற்படுத்திய ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் படைப்பாற்றலை அங்கீகரிக்கவும். ஆசிரியர்களின் அசாதாரண சிந்தனை திறன் அவர்களின் மாணவர்களுக்கான கல்விப் பயணத்தை வளப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், பல்வேறு செயல்பாடுகளை சீரமைக்க சக ஆசிரியர்களை தூண்டும் வகையில் செயல்படும் ஆசிரியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதனை செயல்படுத்தும் விதமாக பார்வை 2–இல் காணும் செயல்முறைகளின்படி 2025–26 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் அரசு தொடக்க/நடுநிலை/உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் மாவட்டத்திற்கு 10 ஆசிரியர்களை ஆட்சியர் தலைமையிலான குழு தகுதியின் அடிப்படையில் தெரிவு செய்து பாராட்டுச் சான்றிதழ் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அதன் அடிப்படையில் சிறந்த படைப்பாற்றல், தேர்ச்சி சதவீதம், தனித்திறன்கள், போன்ற பல்வேறு சிறப்புகளை கொண்ட, அரசு மேல்நிலை/உயர்நிலை/நடுநிலை/தொடக்கப் பள்ளியில் பணிபுரியும் 10 ஆசிரியர்களை தேர்வு செய்து அதன் அறிக்கையினை புத்தக வடிவில் தயார் செய்து மறு நினைவூட்டுக்கு இடமின்றி உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை/தொடக்கக் கல்வி). மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,(இடைநிலை, தொடக்கக் கல்வி) மாவட்டக் கல்வி அலுவலகம், வேலூர்.
2. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்.